

தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆணையத் தலைவர் சொ.ஜோ. அருண், துணைத்தலைவர் இறையன்பன் குத்தூஸ் ஆகியோர் நலத்திட்டங்கள் வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் முன்னிலையில்,தமிழக வெற்றி கழகம் கட்சியில் இருந்து விலகி தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்வின் போது தொகுதி பார்வையாளர் எவரெஸ்ட். நரேஷ்குமார், மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி, வட்ட, ஒன்றிய,கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை படிவங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி வழங்கினார்!

நாமக்கல், ஜூன் 22 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவங்கள் ஒன்றிய, நகர பேரூர் தி.மு.க. செயலாளர்களிடம்வழங்கி உறுப்பினர் சேர்க்கைக்கான வடிவங்கள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மேற்கு மாவட்ட அலுவலகம் தளபதியார் அரங்கில் நடைபெற்றது.

இதில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பரமத்தி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் திமுகவின் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் என்கிற நோக்கில் ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் உறுப்பினர் சேர்க்கை பணியை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ள வேண்டும் என தி.மு.க.வினருக்கு அறிவுறுத்தியபடி உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவங்கள் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வசம் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி படிவங்களை வழங்கி பணிகளை துவக்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசுகையில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளபடி உறுப்பினர் சேர்க்கையில் அனைவரும் தீவிரம் காட்ட வேண்டும் வாக்குச்சாவடி ஓவர்கள் வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட வேண்டும் உறுப்பினர்படிவங்களில் உறுப்பினர்களை சேர்க்கையில் அதே விவரங்களை டிஜிட்டல் முறையில் பதிவு செய்வதுஅவசியம் அதை எப்படி செய்ய வேண்டும் என்பது குறித்தும் அதற்காக நியமிக்கப் பட்டிருக்கிறபூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் வசம் தெரிவிக்க வேண்டிய தகவல்கள் என்னென்ன என்பது குறித்தும், பி.எல்.ஏ.2 உறுப்பினர்களும் அவர்களோடு இருக்க வேண்டியது அவசியம் என்றும் ஒரு நாளைக்கு சராசரியாக 15 வீடுகளுக்கு சென்றுமக்களை சந்தித்து உறுப்பினர்களாக திமுகவில் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஒரு வாக்குச் சாவடிக்கு 30 சதவீத புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் கட்சியினர், சார்பு அணியினர் என அனைவரும் இதில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் உறுப்பினர் சேர்க்கை நடைபெறும். வீடுகளில் ஸ்டிக்கர் பாக்கெட், காலண்டர் உள்ளிட்ட பொருட்களை வழங்க வேண்டும். எந்தெந்த தொகுதியில் எந்தெந்த வாக்குச்சாவடிகளில் தினசரி உறுப்பினர் சேர்க்கை எந்த அளவுக்கு நடைபெற்று உள்ளது என்பதை டிஜிட்டல் பதிவுகளை வைத்து திமுக தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க. ஸ்டாலின் கண்காணிக்க உள்ளார்கள். எனவே இந்தப் பணிக்கு அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும் என நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களிடம் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி எடுத்து கூறினார்.

இந்நிகழ்ச்சியில் நகர கழக செயலாளர்கள் மேற்கு ஆர் நடேசன், கிழக்கு தா. கார்த்திகேயன், பள்ளிபாளையம் அ.குமார், குமாரபாளையம் வடக்கு டி.விஜய்கண்ணன், தெற்கு ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் பரமத்தி பி.பி.தனராசு, திருச்செங்கோடு வடக்கு வட்டூர் ஜி. தங்கவேல், தெற்கு தாமரைச்செல்வன், மல்லசமுத்திரம் பழனிவேல், கபிலமலை கே.கே.சண்முகம், மோகனூர் ஏ.பி.ஆர் சண்முகம், எலச்சிபாளையம் கிழக்கு எம்.தங்கவேல், மேற்கு செல்வராஜ் பள்ளிபாளையம் வடக்கு நாச்சிமுத்து, தெற்கு இளங்கோகோவன், மத்திய தளபதி செல்வம்,

பேரூர் கழகச் செயலாளர் மல்லசமுத்திரம் திருமலை, பரமத்தி ரமேஷ் பாபு, வேலூர் முருகன், ஆலாம்பாளையம் கார்த்திக் ராஜ், பொத்தனூர் கருணாநிதி பாண்டமங்கலம் வடிவேல் பெருமாள், வெங்கரை ராமலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ‘கலைஞர் தொலைக்காட்சி’ வணிகப் பிரிவு நிர்வாகி

# ஸ்ரீராம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜூன் 22–

கலைஞர் தொலைக்காட்சி வணிகப் பிரிவு நிர்வாகியாகப் பணிபுரிந்த ஸ்ரீராம் மறைவுச் செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

கலைஞர் தொலைக்காட்சி வணிகப் பிரிவின் நிர்வாகியாகப் பணிபுரிந்த ஸ்ரீராம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

ஸ்ரீராம் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், கலைஞர் தொலைக்காட்சி ஊழியர்கள், ஊடக நண்பர்கள் என அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பெருகோப்பனப்பள்ளி ஊராட்சியில் 53.92 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டிலும், ஜெகதேவி ஊராட்சியில் 56.60 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டிலும், அஞ்சூர் ஊராட்சியில் 60.75 லட்சம் திட்ட மதிப்பீட்டிலும் மொத்தம் 1.71 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான மூன்று பணிகளையும் மூன்று ஊராட்சிகளைச் சேர்ந்த தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் நகர்ப்புறச் சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 91 லட்சம் ரூபாய் நிதியில் காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணிகளை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தனது சொந்த நிதியில் 2.60 லட்சம் ரூபாய் செலவில் காவேரிப்பட்டணம் பேரூராட்சியில் மூன்று இடங்களில் தண்ணீர் தொட்டி அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொடுத்தார். இந்நிகழ்ச்சிகளில் சீனிவாசன், கிருபாகரன், நாகராசன், அறிஞர், ராஜேந்திரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், சாஜித், பாபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.6.2025) சென்னை, காவேரி மருத்துவமனையில், உடல்நலக் குறைவால் மறைவெய்திய கலைஞர் தொலைக்காட்சி வணிகப்பிரிவு நிர்வாகி ஸ்ரீராம் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# தகவல் தொழில் நுட்ப அணி வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஜூன் 22-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு வருமாறு:-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர் மற்றும் தளி சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி தகவல் தொழில் நுட்ப அணி (30 Age IT wing) மற்றும் வாக்குச் சாவடி முகவர்கள்(BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இன்று (22.06.2025 ஞாயிற்றுக்கிழமை) கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

ஒசூர் சட்டமன்ற தொகுதி காலை 9.00 மணி சூடப்பா திருமண மண்டபம், ஒசூர்.

தளி சட்டமன்றத் தொகுதி நண்பகல் 1.00 மணி சப்தகிரி மண்டபம், தேன்கனிக்கோட்டை 23.06.2025 திங்கட்கிழமை

வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி காலை 9.00 மணி எஸ்.ஏ.எஸ். மஹால், சூளகிரி

இந்த பயிற்சி பாசறைக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய , பகுதி, பேரூர் செயலாளர்கள், வாக்குசாவடி ஒருங்கிணைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பா.கோவிந்தராஜன் தலைமையில் - நாகை மாவட்டம்

# கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் - இரா சங்கர் சிறப்புரை !

நாகை, ஜூன் 22-

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் கீழ்வேளூரில் சண்முக திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவை தலைவர் தங்க. மனோகர் தலைமை தாங்கினார். கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே பழனியப்பன். முன்னிலை வைத்தார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினரும் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ப. கோவிந்தராஜன் வரவேற்புரையாற்றி பேசினார்.

கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன். சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், மாநில விவசாய தொழிலாளி துணைச் செயலாளர் இரா. சங்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.


கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கடந்த ஜூன் 1ம் தேதி மதுரை திராவிட முன்னேற்று கழகத்தின் பொது குழுவை கூட்டி, சிறப்பு மிக்க தீர்மானங்கள் நிறைவேற்றி, பொதுக்குழு கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க..ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து கொள்வதே டு பொதுக் குழு தீர்மானத்தின் படி மொழி, மானம் காத்திடவும் தமிழ் நாட்டின் அனைத்து குடும்பகருக்கும், ஒரு குடையயின் கீழ் இணைத்து வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலை எதுர்கொள்ள தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை வீடு வீடாகச் சென்று எடுத்து கூறி, தமிழ் நாட்டின் உரிமைகளை காத்திடும் பொருட்டு ஓரணியில் தமிழ்நாடு என கழகத்தின் புதிய மற்றும் உறுப்பினர் சேர்க்கையை வாக்காளர்களில் 30 சதத்திற்கும் மேற்பட்டவர்களை தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் பணியை ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல் வீர்கள் ஜூலை 20ம் தேதி முதல் 40 நாட்கள் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை பணி கழகத்தினர் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதி அன்று கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகள் தோறும் கழகக் கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி, நலத்திட்ட உதவிகளை வழங்கிய அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும்,

டெல்டா மாவட்டத்தின் வாழ்வாதாரமான விவசாயம் செழிக்க இந்த ஒண்டு மேட்டூர் அணையை ஜூன் 12ம் தேதியும் கல்லணையை ஒன் 15ம் தேதியும் தனக் பொற் கரங்களால் திறந்து வைத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வது எனவும் தமிழ் மொழி, தமிழ் இனத்தின் தொன்மையை பறைசாற்றும் கீழடியில் அகழ்வு ஆய்வு பணியை ஒன்றிய அரசு தொடங்க வே ண்டும் என்றும், கீழடி அகழ்வு ஆய்வில் மெத்தம் காட்டும் ஒன்றிய அரசுக்கு கண்டனத்தை தெரிவித்து கொள்வது எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இளம்.சுந்தர், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஜவகர் பாட்சா, ஏ.எஸ். என்.ராஜா, அங்காடி சேகர், செல்வா ஆத்மநாதன், ஒன்றிய நிர்வாகிகள் ஏ.வேதநாயகம், ஆர்.நடராஜன், சி. வீரமணி, பாரதி மோகன், சேக் முகமது, வெண்ணிலா பாபு, ரவிக்குமார் மற்றும் ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள். கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர்கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. கோவிந்தசாமி
### ஜூன் 22 (2002)



கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் ‘சாது’ கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**